1 3 DEC
STATE LEGISLATURE

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 29th July 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

பத்திரிகைகளின் மீது நடவடிக்கை

*21 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை ஒட்டி பத்திரிகைகள் மீது இம்மாநில அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் கேட்டு மத்திய அரசிடமிருந்து இம்மாநில அரசுக்கு ஏதேனும் உத்தரவு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் இம்மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The Government of India was informed of the circumstances under which action has been taken against the newspapers.

திரு. மு. கருணாநிதி : இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி பத்திரிகைகள் மீது வழக்குகள் தொடரப்பட வேண்டுமானால் அகில இந்தியப் பத்திரிகையாளர் சங்கத்தைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்ற மரபை அரசாங்கம் மேற்கொண்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தில் அவ்வாறு விதி ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. மு. கருணாநிதி : இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட நேரத்தில் குறிப்பிட்ட ஒரு சில பத்திரிகை ஆசிரியர்கள் மட்டும் கைது செய்யப்பட்டு, வேறு சில ஆசிரியர்கள் கைது செய்யப்படாமலும் இருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் பாகுபாடு ஒன்றும் இல்லை. நடவடிக்கை எதற்காக எந்த பத்திரிகை மீது எப்படி எடுத்துக்கொண்டார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. குறிப்பிட்டு கேள்வி கேட்டால் விவரம் தெரிந்து விடை அளிக்கலாம்.

[29th July 1965

திரு. கே. ஏ. மதியழகன் : முரசொலி பத்திரிகை ஆசிரியர்கள் திரு. கருணாநிதி, திரு. மாறன், மற்றும் மாலைமுரசு, தமிழ் நாடு போன்ற பத்திரிகை ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் சுதேசமித்திரன் போன்ற பத்திரிகை ஆசிரியர்கள் கைது செய்யப்படவில்லை. ஷேக் அப்துல்லா சிறையில் வைக்கப்பட்டதற்கும், கருணாநிதி சிறையில் வைக்கப்பட்டதற்கும் உள்ள வித்தியாசம் போன்று இதற்கும் காட்டப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி வித்தியாசம்தான்.

திரு. சா. கணேசன் : விடுதலை பத்திரிகையில் அதேமாதிரியான கடுமையும், கொடுமையும் நிறைந்த வாசகங்களிலே, ஆட்சியையும், ஆட்சியின் மாபையும் அது மட்டுமல்லாமல் தேசத்தில் பீதியை வளர்க்கக்கூடிய வகையிலே "கத்தியை வைத்துக்கொள்ளவும்! நெருப்பை வைத்துக்கொள்ளவும்!" என்று உணர்ச்சியை தூண்டி விடக்கூடிய முயற்சியை செய்கின்றது போன்ற எழுத்துக்கள் வருகின்றனவே, வந்தனவே அவற்றின் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது? நடவடிக்கை எடுக்கவில்லையானால் ஏன் எடுக்கவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்தப் பத்திரிகையிலும் ஆட்சேபகரமான செய்திகள், கட்டுரைகள், விமர்சனங்கள் இருக்கின்றன என்று அரசாங்கம் கருதினால் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. சட்ட நிபுணர்களைக் கலந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. கனம் உறுப்பினர் சொன்ன விஷயத்திலும் ஒரு முறை சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசித்து ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டுமா என்று ஆராய்ந்து கவனிக்கப்பட்டுத்தான் வந்தது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இதுவரை எத்தனை பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது ? என்னென்ன குற்றங்களுக்கு வழக்குகள் போடப்பட்டன ? அந்த வழக்குகளை வாபஸ் வாங்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுவரை ஆறு பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. என்னென்ன குற்றங்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்குத் தனிக் கேள்வி வேண்டும். வாபஸ் வாங்குவதாக உத்தேசம் இல்லை.

திரு. செ. மாதவன் : பத்திரிகைகள் மீது போடப்பட்ட வழக்குகள் சம்பந்தமாக பத்திரிகை ஆசிரியர்கள் முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்து அவர்களிடத்தில் மன்னிப்பு கேட்டு விட்டால் வழக்குகள் வாபஸ் செய்யப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒன்று இரண்டு பத்திரிகை ஆசிரியர்கள் என்னை வந்து சந்தித்து அம்மாதிரியான கருத்து தெரிவித்தார்கள்.

திரு. மு. கருணாநிதி : விடுதலை பத்திரிகை சம்பந்தமாக சட்ட நிபுணர்களை கலந்து ஆலோசிப்பதற்கு தாமதம் ஏற்படுகிறது. முரசொலி போன்ற மற்ற பத்திரிகைகள் சம்பந்தமாக சட்ட-

நிபுணர்களை கலந்து ஆலோசிக்க தாமதம் ஏற்படுவது இல்லை. இவைகளின் மீது விரைவாக நடவடிக்கை எடுப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்ட ஆலோசனை பெறுவதில் வித்தியாசம் ஒன்றும் இல்லை. அப்போதைக்கப்போது ஆலோசனை பெற முடிந்துதான் வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உள்துறை அமைச்சர் திரு. நந்தா அவர்கள் மத்திய சர்க்கார் சார்பிலும் எல்லா ராஜ்ய சர்க்கார் சார்பிலும் அகில இந்திய பத்திரிகைகள் சங்கத்திற்கு வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதியை மீறி பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பத்திரிகைகள் மீது சென்னை அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுத்தது என்று மத்திய அரசு கண்டித்து எழுதி இருக்கிறது என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை. மத்திய சர்க்கார் கண்டிப்பதற்கு நிமித்தம் இல்லை. கண்டிக்கவும் இல்லை.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : கனம் முதலமைச்சர் அவர்கள் ஆறு பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். எந்த எந்த பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தினத்தந்தி, முரசொலி, மாலை முரசு, மாலை மணி, சுதேசமித்திரன், தமிழ்நாடு பத்திரிகைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

திரு. மு. கருணாநிதி : முரசொலி மீது நடவடிக்கை எடுக்க அதிலே வந்துள்ள பெரும்பாலான மொழி பெயர்ப்பு செய்திகள் தான் காரணம். மொழி பெயர்ப்புக்கு இண்டியன் எக்ஸ்பிரஸ், தினமணி பத்திரிகைகளில் வந்த செய்திகள்தான் அடிப்படையாக இருந்தன. ஆகவே அந்தப் பத்திரிகைகளின் மீது ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்ன செய்திகள் வந்தன, என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது என்ற விவரம் என்னிடம் இப்போது இல்லை. அந்தப் பத்திரிகைகளின் மீது ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்பதற்கு தனிக்கேள்வி போட்டால் பதிலளிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : பத்திரிகை மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு முன்பு பத்திரிகை நிருபர்கள் இங்கே தினம் தினம் முதல் அமைச்சர் அவர்களை சந்திக்கிறார்கள். அப்படி இருக்கும்பொழுது அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்கு இந்தமாதிரியான நெருக்கடியான சமயத்தில் அவர்கள் பொறுப்போடு இருக்க வேண்டும் என்று சொல்ல முயற்சி எடுத்தார்களா ? இல்லை என்றால் ஏன் முயற்சி எடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வப்போது பத்திரிகை நிருபர்கள் சந்திக்கும்போதெல்லாம் ஆட்சேபகரமான செய்தி களைப்பற்றி கூறி வந்து இருக்கிறேன்.

திரு. செ. மாதவன் : மன்னிப்புக் கேட்டு விட்டால் வழக்குகளை வாபஸ் வாங்கி விடலாம் என்ற கருத்தை நமது அரசாங்கம் கௌரவப் பிரச்னையாகக் கருதுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் கருத்தை அவர்களே வைத்துக் கொள்ளலாம்.

Police action in Madurai College Campus

*22 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that on 11th February 1965, a Police force made its entry into the campus of Madurai College, and resorted to tear-gas and lathi-charge;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the number of students and staff injured thereby?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) & (*c*) Do not arise.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது மதுரைக் கல்லூரியில் நுழைந்து போலீசார் கல்லூரி முதல்வரை தாக்கியது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாணவர்கள் தடையை மீறி கல்லெறிந்து ஊர்வலம் நடத்தி இத்தகைய சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். அவர்களைக் கலைப்பதற்கு போலீசார் டியர்-காஸும், தடியடிப்பிரயோகமும் செய்ய வேண்டி வந்தது. இவ்வாறு செய்யும்போது கூட்டத்தில் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து இருந்தார்கள். அப்போது 16 மாணவர் களும், ஒரு சில ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : மதுரைக் கல்லூரியில் போலீஸார் நுழைந்து கல்லூரி முதல்வரை அவரது அறையில் தாக்கியிருக் கிறார்கள். அப்பொழுது கல்லூரி முதல்வர் " நான் பிரின்ஸ்பால் " என்று சொல்லியும் கூட அவரைத் தாக்கியிருக்கிறார்கள். அதைக் கண்டனம் செய்து பிரன்ஸ்பாலும், வக்கீல் சங்கமும் செய்தி அனுப்பியுள்ளார்கள். அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரின்ஸ்பால் அறையிலே புகுந்து தாக்கினார்கள் என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. வக்கீல்கள் சங்கம் சொல்வதை எல்லாம் எடுத்துக் கொள்ள முடியாது.